# தாயே...! அடுத்த பிறவியில் நான் உங்கள் மகனாக வேண்டும்.



அன்னையை இழந்து ஆதரவற்று நின்ற வேளை
அன்புடனே எனை அரவணைத்து ஆதரவு காட்டி
உங்களது எட்டு மகவுடன் என்னையும்
ஒன்பதாவது மகனாக ஒன்று சேர்த்து
ஒன்பது வயது முதல் இருபத்து மூன்று
வயது வரை கண்ணின் மணிபோல்
என்னைக் காத்து....கல்வி தந்து
களிப்புடனே நான் வாழ வழி தந்து
தங்கள் செல்வங்களைப் போல் எனையும்
வளர்த்து உருவாக்கிய என் இனிய தெய்வமே
மறு பிறவி ஒன்று உண்டென்றால்
அதில் நான் உங்கள் மகனாகப் பிறக்க
வேண்டும் அம்மா...!

*-----தங்கள் பிரிவால் துயருறும்----*
*வளர்ப்பு மகன்*
**நா.குணரெத்தினம்**
*அவுஸ்திரேலியா*